# 16. GENERAL FUND WORKS

## 16.2 ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து உபரி நிதியினை உபயோகப்படுத்தி பணிகளை செய்தல் – ஒப்புதல் அளிப்பதற்காக நிதி வரம்பினை உயர்த்தப்படுதல்

ஊரக வளர்ச்சித்துறை

அரசாணை (நிலை) எண். 4 நாள் : 3.1.1997

பார்வை :

1) அரசு ஆணை (நிலை) எண்.1531, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 29.7.76
2) அரசு ஆணை (நிலை) எண்.310, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 3.3.81
3) அரசு ஆணை (நிலை) எண்.678, ஊரக வளர்ச்சி, நாள் 25.8.87
4) அரசு ஆணை (நிலை) எண்.229, ஊரக வளர்ச்சி, நாள் 15.10.96
5) ஊரக வளர்ச்சித் துறையின் நேர்முக கடிதம் எண். 44149/வி1/96, நாள் 6.12.96
6) ஊரக வளர்ச்சித் இயக்குநரின் கடிதம் எண். ஆர்.ஒ.சி.82819/96/ தி.11.3, நாள் 6.12.96

**ஆணை**

பார்வையில் மூன்றாவதாக உள்ள அரசாணையில் ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து நிறைவேற்றக்கூடிய தனியான (Individual Works) பணிகளுக்காக ஒப்புதல் அளிப்பதற்கான வரம்பு பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| 1) | ரூ. 2.00 இலட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. மாவட்ட ஆட்சித் தலைவர் |
| 2) | ரூ.2.00 இலட்சங்களுக்கு மேல் ரூ.5.00 இலட்சங்கள் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. ஊரக வளர்ச்சி இயக்குநர். |
| 3) | ரூ.5.00 இலட்சங்களுக்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. அரசு. |

உபரித் தொகையை கணக்கிடும் முன்னர் குறைந்தபட்சம் ரூ.5.00 இலட்சம் பொது நிதியில் ஒதுக்கத் தொகையாக (Reserve Funds) வைக்கப்பட வேண்டும், என்றும், அத்தொகையினை உபரித் தொகை கணக்கீட்டில் சேர்த்துக்கொள்ளக்கூடாது எனவும், பார்வையில் நான்காவதாக உள்ள அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் மேற்கூறிய பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான இவ்வரம்பினை முறையே ரூ.5.00 இலட்சம் மற்றும் ரூ.10.00 இலட்சம் என உயர்த்தப்படலாம் என 30.11.96 மற்றும் 1.12.96 அன்று சென்னையில் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற தலைவர்கள் மாநாட்டில் ஊராட்சி ஒன்றிய குழுக்களினால் கோரப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநரும் பார்வையில் இறுதியாக உள்ள கடிதத்தில் மேற்கூறியவாறே நிதிவரம்பினை உயர்த்தவும் உபரித் தொகையில் ரூ. 50 வரைக்கும் செலவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் அளிக்க அனுமதிக்குமாறும் கோரியுள்ளார்.

2) ஊராட்சி ஒன்றியக்குழுக்களினால் பரிந்துலைக்கப்பட்ட மேற்கூறப்பட்ட கோரிக்கையினையும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பினையும் அரசு ஏற்றுக்கொண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செய்யப்படும் தனியான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கக் கூடிய வரம்பினை பின்வருமாறு உயர்த்தி ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | ரூ. 5.00 இலட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. மாவட்ட ஆட்சித் தலைவர் |
| 2) | ரூ.5.00 இலட்சங்களுக்கு மேல் ரூ.10.00 இலட்சங்கள் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. ஊரக வளர்ச்சி இயக்குநர். |
| 3) | ரூ.10.00 இலட்சங்கள் மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. அரசு. |

## 16. GENERAL FUND WORKS

**15.10.96** ஊரக வளர்ச்சித் துறை நாளிட்ட அரசு ஆணை (நிலை ) எண் **.229** நிர்ணயிக்கப்பட்டபடி பொது நிதியில் உள்ள உபரி நிதியை கணக்கிட்ட பின்னர் உபரி நிதியில் **50**ரூ வரை செலவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படு"றது நிதித்துறையின் அ.சா.கு. எண். 5421/ FS/T / 96, நாள்: **16.1296.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்